உணவு மூலம் பெறப்படுகிறது. மீதி 100 நாட்களுக்கான தானியச் செலவுக்கும் 200 நாட்களுக்குமே ஆகும் மசாலா சாமான்கள், விறகுச் செலவு முதலியவற்றிற்கும் அரசு மானியமாகவும் உள்ளாட்சி மன்றப் பங்குத் தொகையாகவும் பெறப்படும் ஒரு நாளைக்கு ஒரு மாணவனுக்கு 15 காசு என்ற தொகை பயன்படுத்தப்படுகிறது.

திரு. செ. சிவசாமி: தமிழகத்தில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் 60 சதவிகிதம் பேர் இருக்கக்கூடிய காரணத்தால் சாதாரண கிராமாந்திர விவசாயக் குழந்தைகள் மதிய உணவுத் திட்டத்தை அமல் நடத்தும்போது மாதத்திற்கு ஒரு தடவையாவது அந்தக் குழந்தைகளுக்குக் கறி போடப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி இதே கேள்வியை முன்பே கேட்டு விட்டார்.

கோவை மத்திய சிறைக்காவலர்களுக்குக் குடியிருப்புகள்.

* வினா எண் 147: திரு. கு. ரமணி: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அ) கோவை மத்திய சிறையில் பணிபுரியும் வார்டர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா?

ஆ) ஆம் எனில், மொத்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு?

இ) வார்டர்களின் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) 118

(இ) 142

முதல் தலைமைக் காவலர்		3
முதல் நிலைக் காவலர்		
(நிரந்தரம்	—11	
தற்காலிகம்	— 1)	12
2—ம் நிலைக் காவலர்கள்		
(நிரந்தரம்	— 113	
தற்காலிகம்	— 14)	127
	மொத்தம்	142

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, கோவை சிறையில் பணி புரியும் காவலர்களில் பெரும்பகுதி காவலர்கள் குடியிருக்கின்ற வீடுகள் நீண்ட காலத்திற்கு முன் கட்டப்பட்டதால், அது மிகவும் பழுதடைந்து, சரியான பராமரிப்புக்கூட செய்யப்படாமல், படு மோசமான நிலையில், மாட்டுத்தொழுவத்திற்கு சமமாக, உள்ளது என்று சொன்னால் மிகையாகாது, அப்படிப்பட்ட வீடுகள்இருக்கின் றன, அமைச்சரவர்கள் அந்த வீடுகளைப் பார்வையிட்டு, அதை மாற்றி, நல்ல வீடுகளாகக் கட்டிப் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவைச் சிறைக்கு மட்டுமல்ல; தமிழகத்தின் முக்கிய சிறைச்சாலைகள் அனைத்திற்கும் இப்படிப்பட்ட வசதி களை செய்து தர தீவிர நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது.

திரு ப. நெடுமாறன் : மாண்புமிகு தலைவரவர்களே, சிறையி லே பணியாற்றுகின்ற வார்டர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்கு எனது பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் சிறையிலே பணியாற்றுகின்ற வார்டர்கள் மற்றும் அலுவ லாளர்கள் 24 மணி நேமும் அங்கேயிருந்து, ஆயுள் கைதிகளைப் போல வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுக்கு குறிப் பிட்ட வேலை நேரம் நிர்ணயிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, அவர்களுக்கு 24 மணி நேரம் என்ற நியதி இல்லை, ஆனால் அவர்களிடமிருந்து சில கோரிக்கைகள் வந்திருக்கின்றன; அவைகள் பரிசீலனையில் இருக்கின்றன; நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு கு. ரமணி: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கொடுத்த பதில் திருப்திகரமான பதிலாக இல்லை என்பதைச் சொல்லி, கோவைச் சிறை சம்பந்தப்பட்டவரையில் அந்த பழைய வீடுகளை மாற்றியமைக்க, கோவை சிறைக்கு என்று ஏதாவது திட்டம் இருக்கின்றதா? இருந்தால் எப்பொழுது அந்த வீடுகள் மாற்றி அமைக்கப்படும். பழைய வீடுகள் முழுவதும் அப்படி மாற்றி யமைக்கப்படுமா அல்லது ரிப்பேர் பார்த்து புதுப்பித்துக் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் என்ன வசதி குறைவு என்று சுட்டிக் காட்டினால் அதைப்பற்றி கவனிக்கலாம். கோவை சிறை உள்ளிட்ட மற்ற முக்கிய சிறைச்சாலைகள் சம்பந்த மாக இதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் கூறினேன். அதில் கோவையும் உள்ளடங்கியிருக்கிறது; கண்டிப்பாக அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்